அனுப்புநர்

திரு.சி.செல்வராஜ் Msc., MEd.,
இணைஇயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர்
(கல்வி), பாண்டிச்சேரி.

**ந.க.எண்.026088/எப்2/2023** **நாள் :28.02.2023**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வு மார்ச்/ஏப்ரல் 2023– விடுபட்ட / பார்கோடு இல்லாத / சேதமடைந்த முகப்புத்தாட்கள் – இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யக் கோருதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

******

நடைபெறவிருக்கும் மார்ச் 2023 மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்குரிய முகப்புத் தாட்கள் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் அனுப்பபட்டு, முகப்புத்தாட்களை சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வழங்கி, முதன்மை விடைத்தாட்களுடன் முகப்புத்தாட்களை இணைத்து தைக்கும் பணியினை மேற்கொள்ள தேர்வு மையத் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்துமாறு அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. தேர்வு மையத் தலைமை ஆசிரியர்கள் தங்கள் மையத்தில் தேர்வெழுதும் அனைத்துத் தேர்வர்களுக்கும் தேர்வெழுதும் அனைத்து பாடங்களுக்கான முகப்புத் தாட்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

முகப்புத்தாட்கள் கிடைக்கப் பெறாத, சேதமடைந்த (Barcode - Reg.No. overlapped, bar code smudged), பாடத் தொகுப்பு எண் மாற்றம் உள்ள முகப்புத்தாட்களை தேர்வு மையத்திற்கென வழங்கப்பட்டுள்ள User ID / Password கொண்டு இணையதளம் மூலம் **08.03.2023** அன்று முதல் அந்தந்த தேர்வு மையத்திலேயே பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**முகப்புத்தாட்கள் பெறப்படவில்லை / சேதமடைந்திருந்தல் / பார்கோடு இல்லாதிருத்தல் (Barcode Missing / Bar Code Damage) / பாடத் தொகுப்பு எண் மாற்றம் ஆகிய காரணங்களுக்காக மட்டுமே முகப்புத்தாட்கள் பதிவிறக்கம் செய்திட வேண்டும் என்பதை** அனைத்து தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் / முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு வலியுறுத்தி தெரிவிக்க வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி தேர்வு மையத் தலைமை ஆசிரியர்களை நேரிடையாக தொடர்பு கொண்டு மேற்படி விவரங்களை பெற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

..2..

**மேலும், தனித்தேர்வர்கள் மற்றும் பள்ளி மாணவர்களில் முதலாமாண்டு தோல்வியுற்ற பாடங்களுக்கான (Except Direct Private Candidates) முகப்புத்தாட்களை மஞ்சள் நிறத்தாளில் மட்டுமே அச்சமுழுத்தம் செய்ய வேண்டும் என்பதையும் அனைத்து தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் / முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு வலியுறுத்தி தெரிவிக்க வேண்டும்**

பெயர் பட்டியலில் சரியான பதிவுகள் இருந்து, தேர்வு மையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட முகப்புத்தாட்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திருத்தங்கள் ஏதேனும் இருந்தால் பின்வரும் வழிமுறைகளின்படி செயல்பட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. தேர்வரின் பெயர் (Candidate's Name)
2. பயிற்று மொழி (Medium)
3. புகைப்படம் மாறியிருத்தல்

| வ. எண் | முகப்புத்தாளில் **(Topsheet)** உள்ள குறை | | நிவர்த்தி செய்தல் |
|---|---|---|---|
| **1.** | முகப்புத்தாளில் (Topsheet) தேர்வரின் பெயர் தவறாக இருப்பின் | : | பெயர் சிவப்பு நிற மையினால் திருத்தம் செய்து முதன்மைக்கண்காணிப்பாளர் attest செய்தல் வேண்டும் |
| **2.** | முகப்புத்தாளில் (Topsheet) பயிற்று மொழி (Medium) தவறாக இருப்பின் | : | முகப்புத்தாளில் பயிற்றுமொழியினை (Medium) சிவப்பு நிற மையினால் திருத்தம் செய்து முதன்மைக் கண்காணிப்பாளர் attest செய்தல் வேண்டும் **(As per Centre Nominal Roll)** |
| **3.** | மாணவர்களின் **(Photo)** புகைப்படம் மாறியிருந்தால் | : | தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் மாணவரின் சரியான புகைப்படத்தை பெற்று ஒட்டி Attest செய்தல் வேண்டும் |

**ஒம்/-**
**இணைஇயக்குநர் (மேல்நிலை)**

**<u>நகல்</u>**
அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
–தகவலுக்காக